# கோறளைப்பற்று பிரதேச சபை

## 57வது சபை அமர்வு (03.11.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** 03.11.2022 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 56ஆவது சபை அமர்வு, 03.11.2022 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

| | |
|---|---|
| 01. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | ~ கௌரவ தவிசாளர் |
| 02. திரு. தர்மலிங்கம் யசோதரன் | ~ கௌரவ உப தவிசாளர் |
| 03. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 04. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 05. திரு. காளிக்குட்டி நடராசா | ~ கௌரவ உறுப்பினர் |
| 06. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | ~ கௌரவ உறுப்பினர் |
| 07. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ~ கௌரவ உறுப்பினர் |
| 08. திரு. கனகரெட்ணம் கமலநேசன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | ~ கௌரவ உறுப்பினர |
| 11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 12. திரு. கதிரவேலு நல்லரெட்ணம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 13. திரு. குணராசா குணசேகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 14. திரு.கந்தசாமி பகீரதன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 15. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 16. திரு. சாமித்தம்பி மணிசேகர | ~ கௌரவ உறுப்பினர் |
| 17. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 18. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ~ கௌரவ உறுப்பினர் |
| 19. திருமதி. பொன்னையா கலைவாணி | ~ கௌரவ உறுப்பினர் |
| 20. திரு. சுந்தரம் சுதர்சன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 21. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 22. திரு. சண்முகம் கதிரவன் | ~ கௌரவ உறுப்பினர் |

56ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 03.11.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது

அதனைத்தொடர்ந்து 57 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

எமது சபை நடைவடிக்கைகளில் மிக முக்கியமான விடயமான கடந்த செவ்வாய்க்கிழமை அன்று உலகவங்கியினால் தரப்பட்ட நிதியினை நாங்கள் பயன்படுத்தி மக்கள் சேவைக்காக பயன்படுத்தியிருக்கின்றோம் என்பதனை மதீப்பீடு செய்வதற்காக உலகவங்கியின் அங்கத்தவா குழு , உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , இவ் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்கள் கடந்த செவ்வாய்கிழமை வருகைதந்ததாகவும் , வேலைத்திட்டங்களை அவர்கள் எதிர்பார்த்ததை விட நன்றாக செய்திருந்ததனால் அவர்களுக;கு திருப்பியளித்திருக்கும் என நம்புவதாக குறிப்பிட்டதுடன் , இதற்கான அதனை முழுமையாக வழிநடத்தியது எங்களுடைய சபையின் செயலாளர் அவர்கள் எனவும் அத்துடன் அவருடைய அற்பணிப்பும் அத்துடன் எமது உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களைப் பயன்படுத்தி இரவு பகலாக வேலைகளை செய்தனை சுட்டிக்காட்டியதுடன் அத்துடன் இதற்கான அறிக்கையினை வருகைதந்த குழுவினர் மிக விரைவில் அனுப்பிவைப்பார்கள் எனவும் , முதல் முதலாக எமது சபையில் தான் மதீப் பீட்டினை தொடங்கியதாகவும் அத்துடன் இவ் செயத்திட்டம் திருப்தி அளிப்பதாகவும் உள்ளூர் அதிகாரிகள் அறிவித்திருந்தனர் எனவும் அந்த வகையில் அதற்காகப்பாடுபட்ட சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர் ஊழியர்களை உறுப்பிகனர்கள் சார்பாக பாராட்டுவதாகவும் தெரிவித்ததுடன் அத்துடன் அதனுடன் இணைந்த சபையின் முகப்பு அலுவலகம் மற்றும் முறக்கொட்டாஞ் சேனை பல் தேவைக் கட்டிடமும் பார்வையிடப்பட்டதாகவும் அதனடிப்படையில் அடுத்த கட்டத்திற்கான நிதியினை வழங்குவார்கள் என நினைப்பதாகவும் அவ்வாறு கிடைத்தால் அடுத்தகட்ட வேலைகளை தொடங்கலாம் எனவும் அத்துடன் வேலைகள் செய்யப்படாத சபைகளின் நிதியினையும் வேலைகள் திருப்திகரமாக செய்யப்பட்ட சபைகளுக்கு ஒதுக்கீடு செய்ய இருப்பதாகவும் தெரிவித்ததுடன் அத்துடன் நேற்றைய தினம் அம்பாறைமாவட்டம் பார்வையிடப்பட்டதாகவும் அவ் வேலைதிட்டம் முடிவடைந்த பிற்பாடு அறிக்கைகளை அனுப்பிவைப்பதாக கருதுவதாகவுத் தெரிவித்ததுடன் அன்று அவர்கள் பார்வையிட்டவிடயங்கள் திருப்திகரமான விடயங்களாக அமைந்தாகவும் சுட்டிக்காட்டியதுடன் எமது JCB இயந்திரம் திருத்தவேலை முடிவடைந்து பி.ப 2.00 மணியளவில் கொண்டுவரப்படவுள்ளதாகவும் கூறிக் கொண்டு கடந்தமாதக் சுட்டக்குறிப்பினை உறுதித்தருமாறு கேட்டுக் கொண்டு தனது தலமையுரையினை நிறைவு செய்தார் .

அதனைத் தொடர்ந்து கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி பகீரதன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன், கூட்டக்குறிப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவாக வாக்கெடுப்பு இடம்பெறும்போது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு.கதிரவேலு நல்லரெட்ணம், திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. குணராசா குணசேகரன், திரு.கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணப்பிள்ளை சேயோன், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி பஞ்சாட்சரம் லெட்சுமி ,ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம், திரு. சுந்தரம் சுதர்சன் , திரு. சண்முகம் கதிரவன், ஆகிய 18 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் எதிராக எவ்வித வாக்கும் பதிவாகத நிலையில் கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது

புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் நடுநிலை வகித்தனால் கடந்தமாதக் கூட்டக்குறிப்பானது 18 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதுடன் கௌரவ உறுப்பினரான ஜனாப் சேகு இஸ்மயில் முஹம்மது இம்தியாஸ், திருமதி பொன்னையா கலைவாணி, திருமதி கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 03 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடைபெறும்போது அவையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

**கணக்கறிக்கை சமர்ப்பித்தல்**

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்தமாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது

## தீர்மானங்களை நிறைவேற்றல்

### 01. தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/57/NOVEMBER/01/2022

- கோறளைப்பற்று பிரதேச சபையில் கடமை புரியும் பதிலீட்டுத் தொழிலாளர்களின் சேவைக்காலத்தினை மேலும் 06 மாதகாலத்திற்கு நீடிப்புச் செய்வதற்கான சபை அங்கீகாரம் பெறல்.

அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் இவ் சேவைக்கால நீடிப்பானது வழமையாக 28 பதிலீட்டு தொழிலாளர்களுக்கு நீடிப்புச் செய்யப்பட்டுவருவதாகவும் வழமையாக அதில் திரு மகேந்திர சிங் என்பவர் கடமைக்கு சமூகமளிப்பதில்லை எனவும் சுட்டிக்காட்டினார் அத்துடன் எமது சபையில் அண்ணளவாக மூன்று வருடா காலமாக கடமைபுரிந்துவரும் கணனி பயிலுனருக்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த செல்வி செல்வி. சிவனேசராசா பவதர்ஷா அவர்கள் இதுவரைகாலமாக கொடுப்பனவின்றி கடமைபுரிந்து வருவதாகவும் அவரை இவ் பதிலீட்டு தொழிலாளர்களுக்கான

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. குணராசா குணசேகரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/57/NOVEMBE /01/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

### 02. தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/57/NOVEMBER/02/2022

- எமது சபையில் பதிலீட்டு தொழிலாளர்களாக கடமைபுரிந்து வந்த சில தொழிலாளர்கள் இடை விலகியதால் அவ் வெற்றிடத்திற்கு எமது சபையில் தற்காலிகமாக கடமை புரிந்துவரும் செல்வி. சிவனேசராசா பவதர்ஷா அவர்களை பதிலீட்டு தொழிலாளராக நியமிப்பதற்கும் அவருக்கான கொடுப்பனவை வழங்குவதற்கான சபை அங்கீகாரம் பெறல்.

அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் எமது சபையில் அண்ணளவாக மூன்று வருடா காலமாக கடமைபுரிந்துவரும் கணனி பயிலுனருக்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த செல்வி செல்வி. சிவனேசராசா பவதர்ஷா அவர்கள் இதுவரைகாலமாக கொடுப்பனவின்றி கடமைபுரிந்து வருவதாகவும் , இடை விலகிய பதிலீட்டு தொழிலாளர்களின் வெற்றிடத்திற்கு இவரை நியமித்து பதிலீட்டு தொழிலாளரிற்கான கொடுப்பனவை வழங்குவதற்கு கௌரவ உறுப்பினர்கள் ஆதரவு தரவேண்டும் என கேட்டுக்கொண்டார்

அதனைத்தொடர்ந்து உரையாற்றிய ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் மேற்படி பெயரையுடைய (செல்வி செல்வி. சிவனேசராசா பவதர்ஷா) அவர்களளை கண்டிப்பாக இணைத்துக்கொணள்ள வேண்டும் எனவும் அவருக்கான கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டும் எனவும் தனது கருத்தினைப் பதிவு செய்தார் .

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. குணராசா குணசேகரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/57/NOVEMBE /02/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

## 03. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/57/NOVEMBER/03/2022

- திருமதி.பிரசாந்தி சிந்துஜன்(பதிலீட்டு வேலைக்கள தொழிலாளி) அவர்களது சேவைக்கால நீடிப்பு தொடர்பான சபை அங்கீகாரம் கோரல் கோரல்.

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/57/NOVEMBE /03/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

## 04. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/57/NOVEMBER/04/2022

- பழுதடைந்த கிறவல் வீதிகளை கிறவலிட்டு புனரமைப்புச் செய்வதற்கான சபை அங்கீகாரம் பெறல்

அதனைத் தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் அவ் கிறவலிடும் விடயமானது பள்ளங்களை நிரப்புவது நல்ல விடயம் எனவும் வாழைச்சேனை மயானத்திற்கு அருகாமையிலுள்ள வீதிக்கு தனிநபர் ஒருவர் கிறவலிட்டதாக கூறப்பட்டிருந்தது எனவும் அதனடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி மேஜலாட்டமாக கிறவலிடாமல் நல்ல போதிய அளவிற்கு கிறவல்களை இடுமாறும் இவ் வாட்டாரம் எனது வட்டாரமாக இல்லாவிடினும்ம் அப்பகுதி மக்கள் மற்றும் பாடசரலை மபாணவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதனால் இதனைத் குறிப்பிடுவதாகத் தெரிவித்ததுடன் இதனை முன் கூட்டியே செய்யுமாறும் கேட்டுக் கொண்டதுடன் அத்துடன் தனது வட்டாரத்தில் 7 மேற்பட்ட கிறவல் வீதிகள் காணப்படுவதாகவும் அதிலுள்ள குழிகளை நிரப்புவதற்கு ஒரு வீதிக்கு 1 லோட்இற்கு குறைவான கிறவல் போதுமானதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டதுடன் அவ் கிறவலினை எவ்வாறு கொள்வனவு செய்யபடப்போகிறது எனவும் எவ்வாறு பங்கீடு செய்யப்படப்போகிறது எனவும் கேள்வி எழுப்பினார் .

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் பொதுமக்கள் கோரிக்கை வழங்கிய வீதிகளும் காணப்படுவதாகவும் அதிலும் பாடசாலை மாணவர்டகள் அதிகமாகப் பயன்படுத்தும் வீதிகளும் இருப்பதாகவும் அத்துட்ன கௌரவ உறுப்பினர்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட இருப்பதாகவும் இதனை தொழிநுட்ப உத்தியோகத்தர் நேரில் பார்வையிட்டு அதற்கான அறிக்கை வைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் இவ் வீதிக்கான கிறவல்களை அடையாளப்படுத்தி வழங்கினால் நன்றாக இருக்கும் என சுட்டிக்காட்டினார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் எமது சபையில் கடமைபுரியும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் தங்களது கடமையினை சரியான முறையில் நிறைவேற்றுவதில்லை என்பதனை இவ் விடத்தில் கூற விரும்புவதாகத் குறிப்பிட்டதுடன் மக்களுக்கு செய்ய வேண்டிய விடயங்களை செய்வதற்கு இவர்கள் முன்வருவதில்லை எனவும் குற்றம் சுட்டினார்.

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் எமது பிரதேச சபையினூடாக கிறவலிடும் பிரச்சினை 11 மாதம் மற்றும் 12ஆம் மாதத்தில்தான் வருவதாகவும் இன்னும் சில நாட்களில மழை காலம் வருவதனால் கிறவலினை எடுக்கமுடியாத நிலை காணப்படும் எனவும் அதனை விடுத்து அங்கீகாரம் பெற்றவுடன் இவ் வேலையினை ஆரம்பிக்குமாறு சுட்டிக்காட்டியதுடன் அனைத்து உறுப்பினர்களுடன் கலந்துரையாடி இதனை செய்யுமாறும் கௌரவ உறுப்பினர்களும் சில இடங்களை அடையாளப்படுத்திவைத்துள்ளதாகவும் . எமது சபையினால் கிறவலிடப்பட்ட முறாவடை சுங்கான்கேணி கிணிணியடி வீதிகள் சிறிய காண் காணப்படுவதனால் எவ்வித வாகனங்களும் போக முடியாத நிலை காணப்படுவதாகவும் அதற்கு சீமேந்து குழாய் பதித்தால் நிலமை சீராகும் எனவும் தனது கருத்தினைப் பதிவு செய்தார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சிற்றம்பலம் கிருபாகரன் அவர்கள் குடும்பிமலை வட்டாரத்தை பொறுத்தவரையில் கிறவல் வீதிகள் அதிகம் காணப்படுவதாகவும் மக்கள் பயன்படுத்தும் வீதி உழவு இயந்திரம் புதையும் அளவிற்கு பாரியளவில் மோசமாகக் காணப்படுவதாகவும் இதனை சீர்செய்வதற்காக JCB இயந்திரத்தினை தந்துதவுமாறு கோரிக்கை முன்வைத்ததாகவும்

குறிப்பிட்டதுட்ன குடும்பிமலை செல்லும் வீதி கடும் மோசனமான நிலையில் காணப்படுவதாகவும் அதற்கும் JCB இயந்திரம் மூரம் சீர் செய்யமுடியும் எனவும் தெரிவித்ததுடன் , அத்துடன் கூழாவளி பொது மயனா வீதியும் பழுதடைந்த நியைில் இருப்பதால் பரேதங்களை நல்லடக்கத்துக்காக கொண்டு செல்வது கடிகமாக உள்ளதாகவும் அதனையும் செப்பனிட்டுத்தருமாறு கேட்டுக் கொண்டார்

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் தற்பொழுது எனது கௌரவ உறுப்பினர் கூறியது போன்று (திரு. சிற்றம்பலம் கிருபாகரன்) அங்கு கிறவல் தேவையில்லை எனவும் விவசாயிகள் மற்றும் பால் விற்பனையாளர்கள்அதிகம் அங்குள்ள வீதியினைப்பயன்படுத்துவதனால் இரண்டு பகுதிகளிலும் காடுகள் சூழ்ந்து காணப்படுவதனால் யானைத்தாக்கம் அதிகமாக இருப்பதாகவும் எனவே இருபக்கமும் காணப்படும் காடுகளை அகற்றுவதற்கு JCB யினை தந்துதவுமாறு கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் அவர்கள் மாவடிச்சேனை பாடசாலை வீதி தொடக்கம் கொண்டயங்கேணி , கறுவாக்கேணி எல்லை வரையான இடங்களுக்கு கனரக JCடீ வாகனங்களை வழங்கி திருத்துவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் எனவும் அதஃதடன் கொண்டயன் கேணி வீதி பற்றிய விடயங்கள் காவரும் அறிந்த ஒன்றாகும் எனவும் அவ் வீதியானது குன்றும் குழியுமாகாணப்படுவதாகவும் தெரிவித்ததுடன் கொண்டயங்கேணி வீதி மற்றும் ஹப்சாப் பள்ளி பின் வீதியினையும் இவ் வேலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும் எனவும் சுட்டிகாட்டினார்.

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் பிறைந்துறைச்சேனை 206C 8ஆம் வட்டாரத்தின் புகையிரதத் தண்டவாளத்திற்கு அருகாமையிலுள்ள வீதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைப் பலதடவைகள் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் தெரிவித்ததுடன் இதனை அச்செயத்திட்டத்தில் இணைத்துக்கொண்டு துரித கெதியில் செப்பனிட்டுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி பகீரதன் அவர்கள் கிரான் பாடசாலை வீதியினையும் மகாவிஸ்னு ஆலய வீதியினையும் இணைக்கின்ற வீதி கடந்தவருடம் புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் மேற்படி வீதிகளை இணைக்கும் ஆரம்ப பகுதியில் 2 ,3 பள்ளங்கள் காணப்படுவதாகவும் இவ் வீதியினை பாடசாலை மாணவர்கள் மற்றும் சந்தைக்கு செல்பவர்கள் அதிகமாகப் பயண்படுத்துவதாகவும் அதனை கிறவலிட்டு மாத்திரம் செப்பனிடுவது பொருத்தமான ஒன்றாக அமையாது எனவும் சறல,கருங்கல் துகள் அல்லது பழைய கட்டிடங்கள் உடைக்கப்பட்ட கற் துகள்களை கொண்டு செப்பனிடால் மாத்திரமே ் பயன்படுத்த கூடியதாக அமையும் எனவும் அத்துடன் விஸ்னு ஆலயத்தில் சற்டறு தொலைவில் காணப்படும் கொங்றீற் வீதியில் ் காணப்படும் பள்ளங்களில் நீர் தேங்கிக்காணப்படுவதாகவும் அப்பள்ளங்களுக்கு கிறவல் இடுவது பொருத்தமாக அமையாது எனவும் அதற்கு கொங்கிறிட் இடவேண்டும் எனவும் அது போன்று சின்னவெம்பு 50 வீட்டுத் திட்டபகுதியில் காணப்படும் வீதிக்கு கட்டைகளைப் பரவி பாம் ஒன்று இடப்பட்டிருப்பதாகவும் அதற்கு சீமேந்திலான குழாய் பொருத்துவமாக இருந்தால் அவ் வீதியினை மக்கள் சிரமமின்றி பயன்படுத்த முடியும் என சுட்டிக்காட்டினார்

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/57/NOVEMBE /04/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

- 50 வயதுக்குட்பட்ட கௌரவ உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாம் சர்வோதயாவில் நடைபெறுவதனால் அவ் பயிற்சி முகாமிற்கு கௌரவ உறுப்பின் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள் கலந்து கொள்வதாக அறிவித்துள்ளதனால் அவருக்குமான காசேலையினை வழங்க சபை அங்கீகாரம் வழங்குமாறு கௌரவ உறுப்பினர்களிடம் கௌரவ தவிசாளர் கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக மேற்படி விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவினை வழங்குவதற்குவதற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஆதரவினை வழங்கினா.

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 57ஆவது சபை அமர்வானது காலை 10.00 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……………………………………………

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.